# துணை மருத்துவ சேவையின் தொழிற்சங்கங்கள் 24 மணித்தியால அடையாள வேலை நிறுத்தம்!

## மருத்துவ சேவைகள் பெருமளவில் பாதிப்படைவு



துணை மருத்துவ சேவையின் ஐந்து தொழிற்சங்கங்களுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் இன்று காலை முதல் 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

குறித்த தொழிற்சங்க நடவடிக்கை இன்று காலை 8 மணி முதல் நாளை காலை 8 மணி வரை நாடளாவிய ரீதியில் அமுலில் இருக்கும். அதன்படி, ரேடியோ கதிர் தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவ ஆய்வக விஞ்ஞானிகள், மருந்தாளுநர்கள், நரம்பியல் நிபுணர்கள், தொழில் சிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, மருத்துவ தொழிலுட்பங்களான எக்ஸ்ரே, சி.டி ஸ்கான், எம்.ஆர்.ஐ ஸ்கான் மற்றும் மருத்துவமனைகளின் ஏனைய ஆய்வக சேவைகளும் மருந்து விநியோகமும் தடைப்பட்டுள்ளன.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 05 வியாழக்கிழமை 24.08.2023 கதிர் 57

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# சிறைச்சாலையில் பரவிய மெனிங்கோகோகல் மூளைக்காய்ச்சல் பக்டீரியா நோய் தொடர்பாக

## அச்சம் தேவையில்லை - தொற்றுநோய் பணிப்பாளர்



மெனிங்கோகோகல் மூளைக்காய்ச்சல் பக்டீரியா நோய் நிலை குறித்து பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம், என தொற்றுநோயியல் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் இதே நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் பதிவாகி வருவதாக தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித்த கினிகே குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாரத் தொடக்கத்தில், காலி 2 ▶

# கொற்றாவத்தையில் விபத்து 14 வயது சிறுவன் உயிரிழப்பு



யாழ்.வடமராட்சி கொற்றாவத்தை பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்ட விபத்தில் 14 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளதோடு இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் இன்று மதியம் கரணவாய் வடமேற்கு கொற்றாவத்தை கணபதி மில்லுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. 2 ▶

# பிரமிட் திட்ட நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி தடை!

நாட்டில் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை நடத்திய **OnmaxDT** மற்றும் **MTFE** இலங்கை குழுமம் உள்ளிட்ட 9 நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி தடை செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி தனது சமூக ஊடக தளமான டுவிட்டர் பக்கத்தில், பிரமிட் திட்டங்களில் பங்கேற்பதற்கு எதிராக எச்சரித்து இடுகையொன்றைப் பதிவிட்டதுடன் அது தண்டனைக்குரிய குற்றமாகவும் கூறப்பட்டிருந்தது.

குறித்த பதிவில் எந்தவொரு நபரும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டத்தைத் தொடங்குவது, வழங்குவது, ஊக்குவிப்பது, விளம்பரம் செய்வது, நிதியளித்தல், 2 ▶

# சந்திரயான்-3 வெற்றிக்கு ஜனாதிபதி வாழ்த்து!

சந்திரயான்-3 விண்கலத்தை வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கியமைக்காக, இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்று மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சாதனைக்காக இலங்கை பெருமை கொள்கிறது என்று கூறிய விக்கிரமசிங்க, இந்தச் சாதனையை அனைத்து மனித குலத்திற்கும் அர்ப்பணிக்கும் பிரதமர் மோடியின் தாராளமான எண்ணம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் தொடர அடுத்த தலைமுறைகளை ஊக்குவிக்கும் என்றும் கூறியுள்ளார். (த)

# மின்சாரக் கம்பியில் தேர் மோதுண்டதில் 2 பேர் பலி

## பசறையில் சோகம்



பசறை, நமுனுகல கந்தேஹேன கதிர்காமம் தேர் ஊர்வலத்தின் போது மின்சாரம் தாக்கியதில் உழவு இயந்திரத்தில் பயணித்த இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், பூடவத்தை நமுனுகல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய கணேசன் ரமேஷ், 27 வயதுடைய பன்னீர் செல்வகுமார் ஆகிய இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். அத்துடன் 30, 43, 57 வயதுடைய மூவர் காயமடைந்து 2 ▶

# பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விசேட அமைச்சரவைப் பத்திரம் - அமைச்சர் சுசில்

கொழும்பு, ஒக்.24

தற்போதுள்ள பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் சேவையிலிருந்து விலகிய ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபைகளுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் உரிய அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படும் என அமைச்சர் இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் ஆகிய பாடங்களுக்கு 5,400 பட்டதாரி ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள மாகாண சபைகளுக்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், தற்போது சுமார் 32,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்வேறு தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (த)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்குள்ள உணவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்



கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் இடம்பெற்றது.

சிறுவர், பெண்கள் விவகார அமைச்சின் முன்பள்ளி பருவ அபிவிருத்தி திணைக்களத்தினால் குறித்த திட்டம் நாடளாவிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் அரிசி, பருப்பு, அரிசிமா, சத்துமா, நெத்திலி, பேரீச்சை, சோயா, உளுந்து ஆகிய உணவுப் பொருட்களுக்காக 4,000 ரூபா ஒதுக்கப்பட்டு, அவை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், குறித்த பொருட்களின் விலை மற்றும் தர நிர்ணயம் முதலியவற்றை தீர்மானிக்கும் நோக்குடன் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கூட்டுறவு சங்கங்களினால் விநியோகிக்கப் படுகின்ற குறித்த பொருட்களின் மாதிரிகள் அங்கு காண்பிக்கப்பட்டன. பொருட்களைப் பொதியிடலின் போது உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு ஆலோசனையும் வழங்கப்பட்டது.

குறித்த திட்டத்தில் வழங்கப்பட்ட பொருட்களின் குறைபாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட புகார்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், உதவி மாவட்ட செயலாளர் திருமதி. ஹ.சத்தியஜீவிதா, பச்சிலைப்பள்ளி உதவிப்பிரதேச செயலர் திருமதி.மு.குணஜா, மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலக உத்தியோகத்தர்கள், அக்கராயன், பூநகரி, கரைச்சி கிழக்கு, கரைச்சி தெற்கு, கரைச்சி வடக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் பொது முகாமையாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (02)

# யாழ் குடாவில் இளநீர், பழ வியாபாரம் அதீத விலை உயர்வால் பாதிப்படைவு

யாழ் மாவட்டத்தில் அதிக வெப்ப நிலை உடனான வறட்சியான காலநிலை நிலவும் நிலையிலும், யாழ் குடா நாட்டில் பழ, இளநீர் வியாபாரிகள் விலை உயர்வின் காரணமாக வியாபாரம் வழமைபோன்று இடம் பெறவில்லை என கவலை வெளியிட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணகுடா நாட்டில் வெக்கை காலத்தில் பழம், இளநீர் வியாபாரம் அதிகளவில் இடம்பெறும் எனினும் தற்போது பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பழங்களின் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அவற்றின் வியாபாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது .

வெக்கை காலத்தில் பொதுமக்கள் பழம் வாங்க வருவார்கள். தற்பொழுது பழங்களின் விலைகளைக் கேட்டு விட்டு சென்று விடுகின்றார்கள். ஏனென்றால், விலைகள் அதிக அளவில் அதிகரித்துள்ள. இதன் காரணமாக எமது வியாபாரம் முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது, என வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (01)

# மன்னாரில் இருவர் சுட்டுப் படுகொலை!

மன்னார், பாப்பாமோட்டை - முள்ளிக்கண்டல் பகுதியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே அவர்கள் உயிரிழந்தனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவர்கள் இருவரும் மன்னார், நொச்சிக்குளம் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)

## பிரமிட் திட்ட நிறுவனங்களுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வகித்தல், வழிநடத்துதல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாக கூறப்பட்டுள்ளது.

வங்கிச் சட்டத்தின் பிரிவு 83சி இன் விதிகளின்படி குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்குமாறு சட்டமா அதிபரிடம் கோரியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடத்துவதற்காக பின்வரும் 9 நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்டுள்ளன.

01. Tiens Lanka Health Care (Pvt). லிமிடெட்
02. பெஸ்ட் லைப் இன்டர்நேஷனல் (பிரைவேட்). லிமிடெட்
03. Global Lifestyle Lanka (Pvt). லிமிடெட்
04. Mark-Wo International (Pvt). லிமிடெட்
05. VML International (Pvt). லிமிடெட்
06. பாஸ்ட் 3சைக்கிள் இன்டர்நேஷனல் (பிரைவேட்). லிமிடெட் (F3C)
07. Sport Chain App, Sports Chain ZS Society Sri Lanka
08. OnmaxDT
09. MTFE App, MTFE SL குழுமம், MTFE சக்சஸ் லங்கா (Pvt). லிமிடெட் மற்றும் MTFE DSCC குரூப் லிமிடெட். (த)

## மின்சாரக் கம்பியில் தேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பசறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கந்தேஹேன கதிர்காமம் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று மாலை தெய்வானையுடன் புறப்பட்ட தேர் பெரஹர கந்தேஹேன, தேவதுர, பூட்டாவத்த ஆகிய கிராமங்களின் ஊடாக இன்று காலை திரும்பும் வேளை பூட்டாவத்த பகுதியில் குறித்த தேர் அதிவேக மின்சாரத்தைக் கடத்தும் வடத்தில் மோதுண்டதால் இவ்விபத்து இடம்பெற்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் நமுனுகுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (03)

## கொற்றாவத்தையில் விபத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் கொற்றாவத்தை பகுதியைச் சேர்ந்த சாகித்தியன் (வயது 14) எனும் சிறுவன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்தவரும், கடந்த சில வருடங்களாக கொற்றவத்தை பகுதியில் வசிப்பவருமான அஜந்தன் (வயது 21) என்பவர் கை மற்றும் கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் வளைவுப் பகுதியில் திரும்பியபோது இரண்டு வாகனமும் நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டதோடு, மோட்டார் சைக்கிளும் டிப்பருக்குள் சிக்குண்டு தீப்பிடித்து எரிந்துள்ளது. (01)

## சிறைச்சாலையில் பரவிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலையில் இரண்டு கைதிகள் இறந்துள்ளதாகவும் மேலும் ஒரு டசினுக்கும் அதிகமானவர்கள் குறித்த நோயினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கு காரணம் மெனிங்கோகோகஸால் ஏற்படும் மூளைக்காய்ச்சலினால் ஆகும். இது கண்டறியப்படாத நிலை அல்ல. இந்த நோயானது, பாதிக்கப்பட்ட நபர்களின் நெருங்கிய தொடர்பு மூலம் மாத்திரமே பரவுகிறது எனவும் எனவே, சிறைச்சாலையில் பரவும் நோய் சமூகத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் வைத்தியர் கினிகே மேலும் தெரிவித்துள்ளார். (த)

## துணை மருத்துவ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த துணை மருத்துவ சேவை தொழிற்சங்கங்களுக்கான கூட்டுப் பேரவையின் தலைவர், ஏழு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குழந்தைகள் மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவமனைகள், புற்றுநோய் மருத்துவமனைகள், சிறுநீரகவியல் மருத்துவமனைகள் மற்றும் தேசிய மனநல நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகளை இந்த அடையாள வேலைநிறுத்தம் எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் துணை மருத்துவ சேவை தொழிற்சங்கங்களுக்கான கூட்டுப் பேரவையின் தலைவர் உறுதியளித்துள்ளார். (த)





# தேவை

கல்வி சம்பந்தமான You tube chanel இற்கு ஆங்கில பேச்சுத்திறமையுள்ள presenter தேவை. (ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்ற எழுதக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

0752604360

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட maalaikkathir@gmail.com

# கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு 42 லட்ச ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ரோட்டரிக்கழகம், கல்முனை கஷ்டப்பிரதேச மாணவர்களுக்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் மேலும் ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது.

மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், மல்வத்தை நாவலர் வித்தியாலயம், புதிய வளாத்தாப்பிட்டி, தாஹிறா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்காக 195,000ஃ- பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கல்முனை ரோட்டரிக் கழக தலைவர் றொட்டேரியன் ஏஎல்ஏ. நாசர் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான நிதியுதவியை வழங்கிய கன்பரா றொட்டரிக்கழகத்தின் உறுப்பினர் றொட்டேரியன் ரவீந்திரன் கலந்துகொண்டு கொப்பிகளை வழங்கினார்.

றொட்டேரியன் மு.சிவபாதசுந்தரம், சமூக சேவைப் பணிப்பாளர், முன்னாள் தலைவர் றொட்டேரியன் கு. திருச்செல்வம் மற்றும் றொட்டேரியன் எம்.அமிர்தசங்கர் ஆகியோரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

அவுஸ்திரேலியா கன்பரா ரோட்டரிக்கழகம் இதுவரை 4.2 மில்லியன் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை கல்முனை ரோட்டரிக் கழகத்திற்கு வழங்கியுள்ளது.

# பழைய மாணவர்களின் நிதியில் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு புதிய வகுப்பறைத் தொகுதி






காரை இந்துவில் படித்த 1973 இல் பிறந்த பழைய மாணவர்கள் தமது பொன்னகவை வருடத்தை என்றென்றும் நினைவு கூரும் வகையில் இரண்டு மாடிகளைக்கொண்ட இரண்டு வகுப்பறைகளை கட்டிக்கொடுக்க கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாடசாலைக்கு விஜயம் செய்தபோது தீர்மானித்திருந்தனர்.

பாடசாலை நிர்வாகம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் இரண்டு வாரங்களில் மேற்படி வகுப்பறைகளைக் கட்டுவதற்கான அத்திவாரம் நேற்றைய தினம் பழைய மாணவர்கள் பிரசன்னத்துடன் நடைபெற்றது.

இந்தக் கட்டிட அமைப்பிற்கு 2021 ஆம் ஆண்டு 78 இலட்சம் ரூபா வரை உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், தற்போது அத்திட்டத்தினை 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1973 இல் பிறந்து, ஒன்றாகக் கல்வி கற்ற பழைய மாணவர்கள் தமது 50 வது வருடத்தை நினைவு கூரும் வகையில் இத்திட்டத்தினை செயற்படுத்துகின்றனர்.

இத்திட்டத்தினை இந்த வருடத்தினுள் நிறைவேற்றவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

# நல்லைக்குமரன் நூல் வெளியீடு நாளை காலை 9 மணிக்கு

நல்லூர் கந்தன் பெருவிழாவினை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் நூலின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த விழாவில் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றியதோடல்லாமல், சமூகத்திற்கும் பலவிதத்தில் பணியாற்றிய பெருந்தகை ஒருவரை இனங்கண்டு கௌரவித்து, யாழ்விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இவ்வருடம் சைவத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் பெரும் பணியாற்றியதுடன் நில்லாது, பல சமூகப்பணிகளையும் மேற்கொள்ளும் சிவஸ்ரீ தாணுநாதக் குருக்கள் மஹாதேவக் குருக்கள் அவர்களுக்கு குறித்த விருதினை வழங்கி கௌரவிப்பதற்கு சைவசமய விவகாரக் குழு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வுக்கு சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ் மாநகரசபை ஆணையாளருமான இ.த.ஜெயசீலன் தலைமை தாங்குவதுடன் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளரான இ.இலங்கோவனும், சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி செ.சுதர்சனும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)



# குமுதினி மீண்டும் சேவையில்!

நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான குமுதினிப் படகு இன்று வியாழக்கிழமை முதல் மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் திருத்த வேலைகளின் பின்னர் குறிகாட்டுவானில் தரித்துவிடப்பட்டிருந்தது.

நேற்று மாலை அப்படகு குறிகாட்டுவானில் இருந்து பயணிகளை ஏற்றியவாறு நெடுந்தீவு சென்று தரித்ததுடன் இன்று காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்டு அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவுக்குப் பயணித்தது.

யாழ்.குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவுப் பயணிகளுக்கான கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினிப் படகு அடிக்கடி செயலிழந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குமுதினிப் படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பணம் - நெடுந்தீவிற்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

வாழ்முற்றம்
Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு, கோப்பி, கொக்கோ, மிளகு ஆகிய மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன.
076 443 8620

551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# வாக்னர் படைத் தலைவர் கொலையா? மீண்டும் படையெடுப்போமென மிரட்டல்




வாக்னர் படைத் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஷின் விமான விபத்தில் உயிரிழந்ததாக கூறப்படும் நிலையில், அவரை ரஷ்ய அரசு திட்டமிட்டு கொலை செய்ததாக வாக்னர் படை குற்றம்சாட்டியுள்ளது.

ரஷ்ய அதிபர் விளாடிமீர் புதினுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட இரண்டே மாதங்களில் ப்ரிகோஷின் உயிரிழந்தது பல்வேறு தரப்பினரிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ப்ரிகோஷினின் கிளர்ச்சி அறிவிப்பைத் தொடர்ந்து ரஸ்தாவ் மற்றும் லிபெட்ஸ் மாகாணங்களில் வாக்னர் படை நுழைந்தது. அந்தப் படை ரஸ்தாவில் உள்ள ரஷ்ய ராணுவ தலைமையகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மேலும், ரஷிய தலைநகர் மொஸ்கோ நோக்கிச் செல்லவும் வாக்னர் படை வீரர்களுக்கு ப்ரிகோஷின் உத்தரவிட்டார்.

இதனால் உக்ரைனில் போரிட்டு வந்த சுமார் 3,000 ரஷிய வீரர்கள் மாஸ்கோ வரவழைக்கப்பட்டு, அங்கு ராணுவ கவச வாகனங்கள் குவிக்கப்பட்டன.

புடின் மற்றும் ப்ரிகோஷின் தரப்பில் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட நிலையில், தனது படை முன்னேறிச் செல்வதை நிறுத்த ப்ரிகோஷின் ஒப்புக்கொண்டார். அத்துடன் வாக்னர் வீரர்களை உக்ரைன் முகாம்களுக்கு திரும்பிச் செல்லவும் அவர் உத்தரவிட்டார்.

இந்நிலையில், பெலாரஸில் ப்ரிகோஷின் அரசியல் தஞ்சமடைவார் என்றும் ரஷ்ய அதிபர் மாளிகை தெரிவித்தது.

ஆதிக்கம் கொண்ட அதிபராக விளங்கும் புடின், ப்ரிகோஷினுடன் சமரசம் செய்தது அவர் வலுவிழப்பதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது. அதே சமயத்தில், நீண்ட நாள்கள் ப்ரிகோஷினை புதின் உயிரோடு விடமாட்டார் என்றும் பரவலாக பேசப்பட்டது.

இந்த நிலையில், மொஸ்கோவில் இருந்து சென்ற தனியார் வர்த்தக விமானம், புறப்பட்டு 100 கிலோ மீற்றரில் வானில் இருந்து புகையுடன் கீழே விழுந்து நொறுங்கியது. 3 விமானிகளுடன் பயணம் செய்த 7 பேரின் பட்டியலில் ப்ரிகோஷின் பெயரும் இடம்பெற்றுள்ளதாக ரஷ்ய விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால், ப்ரிகோஷின் சென்ற விமானத்தை திட்டமிட்டே ரஷ்ய விமானப் படையினர் சுட்டு வீழ்த்தி இருக்கலாம் என்று இணையத்தில் செய்திகள் பரவி வருகின்றன.

இதற்கிடையே, வாக்னர் படையினர் வெளியிட்ட காணொளியில், "ப்ரிகோஷின் உயிரிழந்ததாக தகவல் பரவி வருகின்றது. அவ்வாறு அவர் உயிரிழந்தால், அதற்கு காரணம் புடின் அரசின் கொலை முயற்சிதான் என்று நேரடியாக நாங்கள் குற்றம்சாட்டுகிறோம்." என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், ப்ரிகோஷின் மரணம் குறித்த தகவல் உறுதிசெய்யப்பட்டால், மொஸ்கோவை நோக்கி நீதிக்காக மீண்டும் அணிவகுப்போம் என்றும் அவர் உயிருடன் இருப்பது உங்களுக்குதான் நல்லது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதேபோல், ப்ரிகோஷின் எப்படி உயிரிழந்தார் என்று தெரியவில்லை, ஆனால் இந்த செய்தியை கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சர்ச்சை கருத்தொன்றைத் தெரிவித்துள்ளார். (04)

## சந்திரயான்-3 வெற்றிக்கு வாழ்த்துக் கூறிய உலகத் தலைவர்களுக்கு பிரதமர் மோடி நன்றி




சந்திரயான் விண்கலத்தின் லாண்டர் நேற்று வெற்றிகரமாக நிலவில் இறங்கியது. இதன் மூலம் இந்தியா விண்வெளித் துறையில் சரித்திர சாதனை படைத்துள்ளது.

நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக தரையிறங்கியதற்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்து இருந்தனர்.

இந்தநிலையில், இந்தியப் பிரதமர் மோடி தனது பதிலில், சந்திரயான்-3 சாதனைக்கு வாழ்த்து, பாராட்டு தெரிவித்த உலகத் தலைவர்கள் அனைவருக்கும் நன்றி. இந்தியாவின் விண்வெளித் திட்டம் எப்போதும் உலகளாவிய நல்வாழ்வை மேம்படுத்த முடிந்ததைச் செய்யும், என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, சீனா, ரஷியா ஆகிய நாடுகளுக்குப் பிறகு நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறங்கிய நான்காவது நாடாக இது இந்தியாவை நிலை நிறுத்தியுள்ளது. நிலவின் தென்பகுதியைத் தொட்ட முதல் நாடாகவும் இந்தியா சாதனைப் புத்தகங்களில் இடம்பிடித்துள்ளது. (04)

## புகுஷிமா கதிரியக்க நீரை கடலில் வெளியேற்ற ஆரம்பித்தது ஜப்பான்



பல்வேறு நாடுகளின் எதிர்ப்பை மீறி புகுஷிமா அணு மின் நிலையத்தின் கதிரியக்க நீரைக் கடலில் வெளியேற்றும் பணியை ஜப்பான் அரசு தொடங்கியுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக ஃபுகுஷிமா அணு மின் நிலையத்துக்குள் கடல் நீர் புகுந்தது. இதனால் அங்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் அணு உலைகளை குளிர்விக்கும் இயக்கம் நின்று போனது. அதையடுத்து, அந்த மின் நிலையத்தின் 3 அணு உலைகள் உருகின. அதிலிருந்து கதிரியக்க எரி பொருள்கள் கடலில் கலந்தன.

அதையடுத்து, ஜப்பானிலிருந்து கடல் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய யூனியன் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது.

அந்த விபத்துக்குப் பிறகு அணு உலைகளிலிருந்து கதிரியக்க நீர் வெளியேறியது. அதனை பெரிய தொட்டிகளில் அதிகாரிகள் தேக்கி வைத்தனர். தற்போது சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்த நிலையில், ஜப்பான் சென்று அந்த நீரை ஆய்வு செய்த ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பின் நிபுணர்கள், அதனை கடலில் கலப்பது பாதுகாப்பானதுதான் என்று கூறினர்.

எனினும், புகுஷிமா அணு உலை நீரை கடலில் கலப்பதற்கு சீனா, தென் கொரியா போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் புகுஷிமா அணு உலையில் தேக்கி வைக்கப்பட்ட கதிரியக்க நீரை சுத்திகரிக்கப்பட்டு கடலில் வெளியேற்றும் பணி இன்று காலை தொடங்கியுள்ளது. அந்த நீரைக் கடலில் கலந்தால், ஜப்பானின் கடல் உணவுகளுக்கு தடை விதிக்கப்போவதாக சீனா மற்றும் ஹொங்காங் அரசுகள் அறிவித்துள்ளமை நினைவுகூரத்தக்கது. (04)

## முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பரிசுப் பொருள் வழக்கின் தீர்ப்பில் குறைபாடு

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு சிறைத் தண்டனை விதித்து அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பில் குறைபாடுகள் இருப்பதாக அந்த நாட்டின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உமர் அட்டா பண்டியால் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத் அமர்வு நீதிமன்றத்தில் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களை நீதிபதி உமர் அட்டா பண்டியால் தலைமையில் 3 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

அப்போது இந்தக் கருத்தை தலைமை நீதிபதி தெரிவித்தார். எனினும், அமர்வு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ள மனு மீது அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு இந்த விவகாரத்தில் தங்களது தீர்ப்பை அளிக்கவிருப்பதாக அவர் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் பதவி வகித்தபோது, அந்நாட்டு அரசுக் கருவூலத்தில் இருந்த வெளிநாட்டுத் தலைவர்களின் பரிசுப் பொருள்களை சட்டவிரோதமாக அதிக விலைக்கு விற்று ஊழலில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் தொடுத்த வழக்கில், இம்ரான் கானை குற்றவாளி என்று இஸ்லாமாபாத் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. அத்துடன் அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை, அபராதம் போன்றவற்றை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. அதை யடுத்து நீதிமன்றம் இம்ரான் கானைக் கைது செய்த அதிகாரிகள் அவரை அட்டாக் நகர சிறையில் அடைத்துள்ளனர் (04)

## இலங்கை கடல் கொள்ளையர்கள் மீது தமிழ்நாட்டில் வழக்கு பதிவானது

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆற்காட்டு துறை, வெள்ளப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 21,22 ஆம் திகதிகளில் கோடியக்கரைக்கு தென்கிழக்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடல் கொள்ளையர்கள் தமிழ்நாடு மீனவர்களை வழிமறித்து கத்தி, இரும்பு கம்பியால் தாக்கி மீன்பிடி வலைகள், மீன்கள், மற்றும் மீன்பிடி பொருட்களை கொள்ளையடித்து கொண்டு மீனவர்களை விரட்டி அடித்து சென்று விட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த ஆற்காடு துறை, வெள்ளப்பள்ளம் மீனவர்கள் 15 பேர் நாகை மற்றும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இந்த தாக்குதல் தொடர்பாக வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழும பொலிசார் 11 படகு மற்றும் அடையாளம் தெரியாத 46 இலங்கை கடல் கொள்ளையர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். வேதாரண்யம் மீனவர்கள் மீது கடந்த 2 நாட்களாக தாக்குதல் நடத்தி, 10 லட்சம் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்ததாக குறித்த வழக்குப்பதிவு செய்யப்பட்டுள் ளது. (04)

# தேசிய ஆக்கத் திறன்போட்டிகள் மாவட்ட மட்டப் பரிசளிப்பு விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து நடாத்திய தேசிய ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக் கான மாவட்ட மட்ட பரிசளிப்பு விழா நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில், உதவி மாவட்ட செயலாளர் திருமதி.ஹ. சத்தியஜீவிதா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாகவும், சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாயினி ஆகியோரும், கௌரவ விருந்தினராக கிளி நொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிவனருள்ராஜா, கரைச்சி பிரதேச செயலாளர் ப.ஜெயகரன், பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன், ஆகியோரும் விருந்தினர்களாக பிரதம கணக்காளர் க.சி. கஜேந்திரன், பிரதம உள்ளகக் கணக்காய்வா ளர் திருமதி.நி.குமுதினி, கண்டாவளை உதவி பிரதேச செயலாளர் சு.துவாரகா, மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. மா.அருந்தவராணி ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பிரதம குருக்கள் ஜெகதீஸ்வர குருக்கள் ஆசியுரை யினை நிகழ்த்தினார். அதனையடுத்து, மாண வர்களுக்கான பரிசில்கள் வழங்கல், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், அதிதிகளின் உரைகள், பரிசில்கள் வழங்கல் முதலான நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலாசார பிரிவு உத்தியோ கத்தர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அறநெறிப் பாட சாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற் றோர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (02)



# இலவச யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூரில் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் செப்டெம்பர் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங் களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்ப வர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோ.ர் வடமாகாணக் கல்வி அமைச் சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண் ணப்பப்படிவங்களைப் பெற்று கல்வி அமைச்சு , வட மாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (01)




# களுவாஞ்சிகுடியில் 80 பயன்தரு பழ மரக்கன்றுகள் நாட்டல்!





(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயல-கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மரநடுகை நி-கழ்வுகளில் ஓரங்கமாக, பழமரத் தோட்டம் அமைக்கும் நிகழ்வானது நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் குருக்கள்மடம் அசீசி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் அவர்களின் வழிகாட்டலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக, பிரதேச செயலகப் பிரிவில் பல மரநடுகைத் திட்டங்கள் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பழமரத் தோட்டம் அமைக்கும் நிகழ்வானது அசீசி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது மா, தோடை, மாதுளை, கொய்யா போன்ற 80 பயன்தரு பழ மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர் திருமதி.சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மலராஜ், அருட்சகோதரர் ஜெகன், அருட்தந்தை அம்றோஸ், நன்னிலம் நிறுவனத்தின் உறுப்பினர் சிந்துஷா, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்-தர் (திட்டமிடல்) மற்றும் சிறுவர் இல்ல மாணவர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ப.ராஜ-திலகன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் வ.பிரசாந்த் (வெளிக்கள இணைப்பாளர்- விதாதா) ஆகியோர் இணைந்து இந்தச் செயற்பாட்டை ஒழு-ங்குபடுத்தியிருந்தனர்.


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர்
Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்